

இனமானப் பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மின்னல் காந்தப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார் கோட்டூர் பிரகாஷ். தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அணி அமைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் மோகன்குமார் பகுதி துணைச் செயலாளர்கள் ரமேஷ். மடிப்பாக்கம் சே.சிந்தன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர் கோட்டூர் சண்முகம், மற்றும் வரதன், மஜித் ஆர் எல்.காந்தன், ஜிம் பிரபு, கொடி பாலா, பாரதி பாஸ்கர் கிஷோர். இந்து உதயா, வெங்கடேசன் ராஜ்குமார், சிவலிங்கம் குமார் அருண் உள்ளிட்ட ஏராளமான தி.மு.கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.




கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் மாநகராட்சியில் 3வது பகுதிக் கழகம் சார்பில் பகுதி செயலாளர் அ. தசரதன் ஏற்பாட்டில் நல திட்டங்கள் வழங்கும் பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்கள். உடன்காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன். மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டுகே. ஆறுமுகம் மேயர் திருமதி. மகாலட்சுமி, யுவராஜ் உள்ளிட்ட பகுதி கழக செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மகளிர் தின வாழ்த்து:

# உலகத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தக் கூடியவர்கள் பெண்கள்!

## ஆதித்தமிழர் பேரவை இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, மார்ச். 8-

ஆதித்தமிழர் பேரவை இரா. அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

உலகத்தில் இருக்கும் மொத்த மக்கள் தொகையில் சரி பாதிக்கு மேல் இருக்கும் பெண்கள் இருக்கின்றார்கள். இவர்கள் குறித்து காலங்காலமாக அடிப்படை வாதிகள் கூறுவது "பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டவர்கள்" என்று மீண்டும் மீண்டும் இதை நிலை நிறுத்துவதற்க்கான சூழ்ச்சிகளை முறியடிப்போம். பெண்களுக்கான தனித்துவம் என்பது தாய்மை. அந்த தாய்மையின் போது ஏற்படும் இடையூறுகளை யெல்லாம் பொறுத்துக் கொண்டு இன்றைக்கு வரைக்கும் இந்த உலகத்தை காத்து வருகின்ற ஆற்றல் பெண்களுக்கு மட்டுமே இருந்து வருகிறது.

பெண்கள் அனைவரும் சேர்ந்து "இனிமேல் நாங்கள் குழந்தை பெற்றெடுக்க தயாராக இல்லை" என்று முடிவெடுத்து விட்டால் இந்த உலகம் என்னவாகும் என்று நாம் சிந்தித்து பார்க்க வேண்டிய அவசியம் ஒன்று உள்ளது.



எனவே, பெண்கள் மீதான தொடரும் அடக்கு முறையை நாம் அனைவரும் ஒடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இன்றைக்கு உலக நாடுகளில் பெண்களை எப்படியெல்லாம் வழிநடத்துகிறார்கள் என்பதை விட குறிப்பாக இந்தியா வில் இந்து மதத்தில் பெண்களை அடக்கி ஒடுக்குகிற முறைகள் தொடர்ந்து இருந்து கொண்டிப்பதை நாம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் ஒரு மாற்றத்தை தந்தை பெரியார் தொடங்கி வைத்த ஆழமான கருத்துக்கள் இன்றைக்கு வரைக்கும் பெண்களை ஓரளவு அடிமை தனத்திலிருந்து விடுவித்து அவர்களுக்கான கல்வி வேலை வாய்ப்பு அவர்களுக்கான மணமகன் மணமக்கள் தேர்வு போன்றவைக்கான சிறிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனால் இது போதுமானது அல்ல இந்த மாற்றம் என்பது பெரிய அளவிலே வர வேண்டும் என்கிற அவசியம் இன்றைக்கு இருக்கிறது

அந்த மாற்றம் ஒரு பெண் "தனக்கான மணமகனை தேர்ந்தெடுக்கிற உரிமை கிடைத்து விட்டாலே அடிப்படையில் சாதியும் மதமும் ஒழிந்து விடும்" அதனால் தான் அந்த உரிமையை அவர்களுக்கு இன்றைக்கு வரைக்கும் முழுமையாக வழங்கப் பட வில்லை. அப்படி அந்த உரிமையை முழுமையாக வழங்க யாராலும் வழங்கக் கூடிய ஒன்று அல்ல.

அந்த உரிமையை பெண்கள் தாங்களே பெற்றுக் கொள்ள வேண்டும்.

பொருளாதார வசதியை மேம்படுத்துவதற்கு பெண்கள் தாங்களே பணி செய்து தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ளுகிற சூழலை தாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாரையும் சார்ந்து இருக்கக் கூடாது அப்பாவையோ, கணவனையோ, மகனையோ சார்ந்திருக்கக் கூடிய நிலையை மாற்றினாலே மிகப்பெரிய மாற்றம் இந்த சமூகத்தில் ஏற்பட்டு விடும் அந்த மாற்றம் ஒன்று தான் உலகத்தின் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக இருக்கும் அதை நினைவு கூர்வதற்க்காகத் தான் இந்த மகளீர் நாளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அப்பொழுது தான் நாம் நினைத்ததைப் போல மகளீர்கள் முற்றிலும் விடுதலை பெற்றுவிடுவார்கள்.

இங்கே இந்துத்துவ சக்திகள் பார்ப்பனியம் போன்றவையெல்லாம் பெண்கள் தங்களுக்கு அடிமையாக இருப்பதையே சுகம் என்பதைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள் அதையெல்லாம் அடித்து நொறுக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது. அதை நோக்கி பயணிப்போம் இந்த நாளை தந்தை பெரியாரை நினைவு கூறுவது தான் பொருத்தமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் இரா.அதியமான் அறிக்கை விடுத்துள்ளார்.

## எஸ்.ஜி.எம்.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில்– நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில்

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் ‘காக்கும் கரங்கள்’ இல்லத்தில் அறுசுவை உணவு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

## எஸ்.ஜி.மாதவன் தலைமை! ரமணி மாதவன் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 8

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அறிவுறுத்தலின் படி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழி காட்டுதலின்படி,

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட ஆலப்பாக்கம், பொன்னி யம்மன் கோவில் பிரதான சாலையில் உள்ள சிவசக்தி காக்கும் கரங்களில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (08.03.2025 சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஜி.எம். மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி உணவு வழங்கி துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் எம்.ரமணி மாதவன் கலந்து கொள்கிறார். எனவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இனமான பேராசிரியர் அவர்களின் 5–ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அவரது நினைவை போற்றுகின்ற வகையில் மீஞ்சூர் பேரூர் செயலாளர் க.சு.தமிழ்உதயன் தலைமையில் திருவுருவப்படத்திற்கு புகழஞ்சலி மற்றும் மாலை அணிவித்து மீஞ்சூர் பஜார் வீதியில் நேஷனல் கஃபே அருகில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழ தலைவர் மி.வீ.கோதண்டம், கவுண்டர் பாளையம் வ.சீனிவாசன். மீஞ்சூர் பேரூர் அவைத்தலைவர் ஜி.ராஜேந்திரன், தலமை கழக வழக்கறிஞர் ஏ.கே சுரேஷ், மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார், மீஞ்சூர் பேரூராட்சி துணை தலைவர் ப.அலெக்சாண்டர் , அணிகளின் அமைப்பாளர் துனை அமைப்பாளர்கள் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் என்கோபால், மீ.இராமகிருஷ்ணன், ஜோசப் ஸ்ரீனிவாசன், திருப்பதி வெங்கடேசன், எஸ்.கணேசன், இந்துஸ்தான். சீனிவாசன், வ.மோகன், சாமுவேல் , தன்ராஜ், சேகர், ஜெயலட்சுமி, தன்ராஜ், முப்புராஜ், எழிலரசன், ஐயப்பன், சந்திரமோகன், ராஜேஷ், தாஸ், மேலும், கழக உடன்பிறப்புகள் மீஞ்சூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## துறைமுகம் மேற்கு பகுதி – 57 (அ) வட்ட முன்னாள் பொருளாளர்

# எஸ்.பாண்டுரங்கன் இல்லத் திருமண விழா: அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி – மேயர் பிரியா ராஜன் – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 8 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 (அ) வட்டக் கழக முன்னாள் பொருளாளர் எஸ்.பாண்டுரங்கன் - பி.ஜெயகௌரி இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (08.03.2025 - சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு, சென்னை, எண். 28/5, பிள்ளையார் கோயில் தெரு, நாராயண பவன் மஹால் (புளூ ஸ்டார் ஹோட்டல் அருகில்) நடைபெறுகிறது.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை ஏற்று மணமக்களை வாழ்த்துகிறார்.



விழாவில் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், இரா. நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், எஸ்.ராஜேஷ் ஜெயின், இரா.கலைச் செல்வி, எம்.இ.கனி, எல். சம்பத்குமார், பா. ஜெகதீஷ், பா.அண்ணாதுரை, கே.ஆர்.அபரஞ்சி, டி.எஸ். சேகர், நா.ரஞ்சித் விஜயாலயன், ஜெ.ஹரிக்குமார், நா.மோகன், எஸ்.வெங்கடேசன், பி.அப்பாவு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.ஜி.துளசிராமன், சி. காந்தி, டி.வேலு, கே. பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துக்குமார், தேவகானம் ராஜா, கேபிள் சங்கர், பிண்டு ஜெயின், ரூபாராம், எல். சாந்திலால், எஸ்.அசோக் ஜெயின், டி.சேகர், பா.நட்ராஜ், ஆர்.வேலாயுதம், பூக்கடை ராஜா, எம். ஆனந்தி, ரீட்டா சு.அண்ணாதாசன், பி.அசோக் குமார், எஸ்.கே.பாருக்சுல் தான் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தமிழன் பிரசன்னா, என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, வெ.பரிமளம், டி.போஸ், எல்.தாஹா நவீன், பி.விஜயகுமார்,பா.பிரதீப்குமார், எம்.விநாயகம், மே.ஜனார்தனன், ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, டி. சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், க.கவியரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## அமைப்பாளர் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் – சென்னை வடகிழக்கு மாவட்ட

# வர்த்தக அணி சார்பில் கழகக் கொடியேற்றி - அறுசுவை உணவு!

## இ.ரமேஷ் தலைமை! டி.எஸ்.மணி – டி.சேகர் – கோமதி சந்தோஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 8-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் வழிகாட்டுதலோடு சென்னை வட கிழக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணைச் செயலாளர் இ.ரமேஷ் தலைமையில் கழக மூத்த முன்னாடி டி.எஸ்.மணி,

2-வது வட்ட செயலாளர் டி.சேகர் ஆகியோர் கழக இரு வண்ண கொடி யேற்றினர்.

2-வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார் கேக் வெட்டி வழங்கினார்.

முன்னாள் நகர செயலாளர் அ.பாண்டியன், முன்னாள் பகுதி துணை செயலாளர் இ.வி.கருணாநிதி, மாவட்ட பிரதிநிதி இ.வி.சரவணன், 2-வது வட்ட பிரதிநிதி பி.பிரமேஷ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.தேசப்பன், 2-வது வட்டகழக முன்னாள் துணை செயலாளர் ஜெ.திலகர், நேரு நகர் கிராமத் தலைவர் எம். இளங்கோவன், இளைஞர் அணி கே.முனுசாமி அனைவரும் இணைந்து பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிகழ்வில் திருவொற்றியூர் மேற்கு பகுதி துணை செயலாளர் இ.குமரவேல், 2-வது வட்ட அவைத்தலைவர் கே.பாலு, ஆர்.எஸ். ரோடு கழக முருகன், முன்னாள் வட்ட செயலாளர் சிவகுமார், வள்ளுவர் நகர் கிராம செயலாளர் வட்ட கழக செயல்வீரர் சரத், அஜீத், தீன்பாய், 2வது வட்ட பிரதிநிதி, சத்திய மூர்த்தி, முத்துகுமார், வி.ஆல்பர்ட்,

மாரியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை தாக்கல்!

# சண்முகம் சாலை அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்தம்!

## மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

தாம்பரம், மார்ச். 8-

தாம்பரம் மாநகராட்சியின் 2025-2026ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் தாம்பரம் மார்கெட் பகுதிக்கு தினம் தினம் பொது மக்கள் வருகை ஆயிரகணக்கில் இருந்து லட்சக்கணக்கில் அதிகரித்து வருவதை முன்னிட்டும் வாகனங்கள் நிறுத்திட இடம் வசதி இல்லாததால் சண்முகம் சாலை அருகில் நவீன அடுக்கு மாடி வாகன நிறுத்தம் கட்டப்பட உள்ளது.

தாம்பரம் மாநகராட்சியின் 2025-2026ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் மற்றும் மாமன்ற கூட்டம் மேயர் க.வசந்தகுமாரி தலைமையில், மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர், துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் முன்னிலையில் தாம்பரம் மாநகராட்சியின் கோவிந்தசாமி கூட்ட அரங்கில் கூட்டம் நடைபெற்றது.

இதில் மண்டல தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, ச. ஜெயபிரதீப், நியமன குழு உறுப்பினர் பெருங்குளத்தூர் எஸ்.சேகர், கல்வி குழு தலைவர் கற்பகம் சுரேஷ், எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் சங்கர் உட்பட மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில் 2025 - 2026ம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதி குழு தலைவர் ரமணி ஆதிமூலம் அவர்கள்,மேயர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர், துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோரிடம் அறிக்கையை சமர்ப்பித்தார்.

நிதிநிலை அறிக்கையில், சாலையில் சுற்றி திரியும் மாடுகளை பிடித்து அடைக்க கால்நடையை பிடித்து அடைத்திட பவுண்டரியை அமைத்திட ரூபாய் ஒரு கோடியும் மதிப்பிலும் அமைத்திடவும்,மாநகராட்சி பள்ளிகளில் தொழில்நுட்ப வகுப்பு ரோபோட்டிக் வகுப்புக்குளுக்காக 50 லட்சம்,மகளிர்க்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பூங்கா அமைக்க ஒரு கோடியும், மாநகராட்சி பகுதிகளில் அறிவியல் பூங்கா அமைக்க ஐந்து கோடியும்,தாம்பரம் மாநகராட்சி பிரதான மார்க்கெட்டு சண்முகம் சாலையை ஸ்மார்ட் சாலையாக மாற்றவும் அங்கு நவீன அடுக்கு மாடி வாகன நிறுத்தம் அமைத்திடவும் 10 கோடியும்,மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டத்திற்காக 27 கோடியும்,மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஏரி குளங்களில் மாசு அடைந்த நீர் நிலையை மாசடைவதை தடுத்து புனரமைக்க ரூபாய் 10.கோடியும்,நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க 3 கோடியும்,அரசு பள்ளி மாணவர்கள் போட்டி தேர்வுக்கு தயாராவது மற்றும் உயர்கல்வி உதவும் வகையில் அதிநவீன படிப்பகம் அமைக்க 3 கோடியும்,மாநகராட்சியின் வருவாய் பெருக்க ஃபுட் ஸ்ட்ரீட் 4.கோடியிலும் அமைக்கப்பட உள்ளது.

இதே போன்று 71 முக்கிய அம்சங்கள் இந்த பட்ஜெட் தாக்களில் இடம் பெற்றுள்ளது.